Singapore Government
MEDIA RELEASE
Media Relations Division, Ministry of Information, Communications and the Arts, 140 Hill Street, #02-02, MICA Building, Singapore 179369.
Tel: 6837 9666 Fax: 6338 3093 Singapore Press Release on the Internet (SPRInter) URL: http://www.sprinter.gov.sg

தேசிய தினச் செய்தி 2005

1 1965 ஆகஸ்ட் 9-ல், சிங்கப்பூர் ஒரு சுதந்திர நாடாக ஆகியது. திடீரென்று, நாம் தனியாக நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. நம்மிடம் இயற்கை வளங்கள் இல்லை, நம்மிடம் பெருநிலம் இல்லை, மேலும் நம்மைத் தற்காத்துக் கொள்ள இராணுவப்படையும் இல்லை. ஆனால், நாம் உறுதியோடு செயல்பட்டோம். ஒன்றுமில்லாத நிலையிலிருந்து ஒரு நாட்டை உருவாக்கத் தொடங்கினோம். நம் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் நம் பிள்ளைகளுக்கு ஓர் எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் நாம் கடுமையாக உழைத்தோம்.

2 இன்று நாம் கொண்டாடி மகிழ்ச்சியடைவதற்குப் பல காரணங்கள் உள்ளன. 40 ஆண்டுகளில், எல்லா எதிர்பார்ப்புகளுக்கும் அதிகமாக நாம் வெற்றியடைந்துள்ளோம்.

(அ) நம் பொருளியல் நல்ல வளர்ச்சி அடைந்திருக்கிறது. ஒவ்வொரு பின்னடைவுக்குப் பிறகும், நாம் மீட்சியடைந்து மேலும் அதிகமான வேலைகளை உருவாக்கி அனைவருக்கும் மேலும் சிறந்த வாழ்க்கையை உருவாக்கி இருக்கிறோம்.

(ஆ) நம் சமுதாயம் நல்லிணக்கம் மிகுந்ததாகவும் ஒன்றிணைந்ததாகவும் இருக்கிறது. நாம் வெவ்வேறு சமூகங்களிக்கிடையே பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தி சிங்கப்பூரர்கள் அனைவரையும் இன்னும் நெருக்கமாகப் பிணைத்துள்ளோம்.

(இ) ஒரு பாது காப்பான, சுத்தமான, துடிப்பான நகரத்தில் வசிப்பதற்கு நாம் உலகெங்கிலிமிருந்தும் முதலீடுகளையும், திறனாளர்களையும், ஈர்த்திருக்கிறோம்.

(ஈ) சிங்கப்பூர் ஆயுதப் படையும் நமது தாயகக் குழுவும் வலுவானவை மட்டுமல்ல சோதிக்கப்பட்டவையும் கூட. அவை இருப்பதால் நாம் தினசரி நிம்மதியாக இருக்கிறோம்.

(உ) ஒரு தேசம் எனும் முறையில் நாம் முதிர்ச்சியும் அடைந்து வருகிறோம்.

3 பல ஆண்டுகளாக நாம் அமைதியை அனுபவித்து வந்திருந்தாலும், நமது பாது-காப்புக்கு ஏற்படும் மிரட்டல்களுக்கு எதிராக நாம் தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டும். லண்டனிலும் எகிப்திலும் நிகழ்ந்த குண்டு வெடிப்புகள், பயங்கரவாதத்திற்கு எதிரான போர் இன்னும் தொடர்கிறது என்றும் எவ்வளவுதான் கடுமையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டிருந்தாலும், பயங்கரவாதிகள் சில சமயங்களில் அவற்றையும் மீறி தாக்குதல்களை நடத்துகின்றனர் என்றும் நமக்கு நினைவூட்டுகின்றன. இதற்கு நாம் நல்ல உளவியல் மூலம் தயாராக இருக்க வேண்டும். அப்போதுதான், பயங்கரவாதிகள் இங்கு தாக்குதலை நடத்தினால், நாம் துவண்டுவிடாமல் உறுதிப்பாட்டுடன் செயல்பட முடியும். மேலும், பயங்கரவாதிகளின் மிரட்டல்களால் நாம் அஞ்சி

பணிந்துபோகாமல் தொடர்ந்து ஒற்றுமையாக ஒரே சமுதாயமாக விளங்க முடியும்.

4 இந்த ஆண்டு நமது பொருளியல் தொடர்ந்து நிலையான வளர்ச்சி கண்டு வருகிறது. ஆண்டின் முதல் பாதியில் வளர்ச்சி 4 விழுக்காடாக இருந்தது. ஆண்டு முழுவதற்குமான வளர்ச்சி 3 புள்ளி 5 விழுக்காட்டுக்கும் 4 புள்ளி 5 விழுக்காட்டுக்கும் இடையே இருக்கும் என நாம் எதிர்பார்க்கலாம். ஆண்டின் முதல் பாதியில், நாம் 45,500 வேலைகளைச் சேர்த்துக் கொண்டோம். கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தோடு ஒப்பிடுகையில், இது மிகவும் அதிகம். வேலை இழந்த ஊழியர்கள், வேறு வேலைகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்திருக்கின்றன.

5 எதிர்காலத்தில், நாம் முற்றிலும் வேறு விதமான சவால்களை எதிர்நோக்குவோம். சீனாவும் இந்தியாவும் வலுவான மற்றும் போட்டித்திறன் மிகுந்த பொருளியல்களாக உருவாகிவருகின்றன. உலகமயம் போட்டியைத் தீவிரப்படுத்தி மாற்றங்கள் ஏற்படும் வேகத்தை அதிகரிக்கிறது. இந்த பொதுவான சவால்களை எதிர்கொள்ள ஆசியான் நாடுகள் மேலும் அணுக்கமாக பணியாற்றி வருகின்றன. 2020ம் ஆண்டில் நாம் ஓர் ஆசியான் சமூகத்தைக் கொண்டிருப்போம். இன்று AUGUST 8 ம் தேதி ஆசியான் தினம். நமது ஆசியான் பங்காளி நாடுகளுடன் சேர்ந்து நமது குடிமக்களிடையே ஆசியான் விழிப்புணர்வை ஏற்படுத்துவோம். இந்த வலுவான ஆசியான் பிணைப்பு

சவால்களை எதிர்கொள்ளவும் நம் முன்னே உள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் உதவியாக இருக்கும்.

6 நமது பொருளியலை வளர்ச்சி அடையச் செய்து மேம்படுத்துவதே நமது முதல் கடமை. நாம் புதிய திறன்களை மற்றும் தகுதிகளை வளர்த்துக் கொள்ள வேண்டும், புதிய சந்தைகளை வெளிநாடுகளில் திறக்க வேண்டும், முதலீடுகளைக் கொண்டு வர வேண்டும், மேலும் புதிய வளர்ச்சித் துறைகளுக்கு வித்திட வேண்டும். நாம் தொடக்கத்திலிருந்தே ஒரு நிதி மையமாகவோ, மின்னியல் உற்பத்தி மையமாகவோ அல்லது விமான மற்றும் கப்பல் சேவைகள் மையமாகவோ இருக்கவில்லை. ஆனால், நாம் அவற்றை உருவாக்கிக் கொண்டோம். ஆனால், நாம் அதோடு நிறுத்திக்கொள்ள முடியாது; தொடர்ந்து நாம் மறு உருவாக்கம் செய்து கொண்டு, உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் பல்லூடகம் ஆகிய துறைகள் போல், புதிய போட்டித்திறன் மிகுந்தத் துறைகளை உருவாக்க வேண்டும். மேலும், நாம் தொடர்ந்து நம் வெளித்தொடர்புகளை வளர்த்துக்கொண்டு, ஆசியான், சீனா, இந்தியா, மத்திய கிழக்கு ஆகியவற்றில் வாய்ப்புகளை நாட வேண்டும். அவ்வாறு செய்தால், மறைந்து வரும் பழைய வேலைகளை ஈடு செய்வதோடு, இன்னும் அதிகமான புதிய வேலைகளை உருவாக்குவோம்.

7 இவற்றை எல்லாம் சாதிப்பதற்கு நாம் சரியான திறன்களையும் மனப்போக்குகளையும் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் நாம் நிச்சயமற்ற மற்றும் மாற்றங்கள் கொண்ட சூழ்நிலையில்

வளப்பமடைய முடியும். அதனால்தான் நாம் முதல்தரம் மிக்க கல்வி முறைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். தேர்ந்தெடுக்கப்பட்ட சிலர் மட்டுமன்றி, ஒவ்வொரு சிங்கப்பூரரும், தத்தம் திறனுக்கு ஏற்ப மிகச் சிறந்த கல்வியைப் பெற வேண்டும். ஆகவே, நாம் பல்கலைக்கழகங்களில் மட்டுமன்றி பலதுறை தொழில் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிலையங்களிலும் அதிகமாக முதலீடு செய்கிறோம். நாம் விரைவு மற்றும் சிறப்பு நிலை மாணவர்கள் மீது மட்டுமன்றி, வழக்க நிலை மாணவர்கள் மீதும் கவனம் செலுத்துகிறோம். நாம் வேலைக்கு முந்திய கல்வியை மட்டுமல்லாமல், வாழ்நாள் கல்வியையும் வலியுறுத்தி வருகிறோம்.

8 மற்ற நகரங்களிலிருந்து மாறுபட்டு, நமக்கே உரிய தனித்தன்மையுடன், நம் சிங்கப்பூர் துடிப்பு மிக்கதாகவும், அனைத்துலகத் தன்மை கொண்டதாகவும் சக்தி மிகுந்ததாகவும் விளங்குவதற்கு, நாம் மறு உருவாக்கம் செய்ய வேண்டும். லண்டன், பாரிஸ், நியூ யோர்க் மற்றும் ஷாங்காய் போன்ற உலக நகரங்களே தங்களைத் தொடர்ந்து மறு உருவாக்கம் செய்யும்போது, நாம் வேறுபட்டு இருக்க முடியாது. எல்லா வசதிகளும் அடங்கிய உல்லாசத் தளங்களை அமைப்பதற்கு இதுதான் முக்கியமான காரணம். அவை வெறும் சுற்றுப்பயணிகளைக் கவர்வதற்காக மட்டும் அமைக்கப்படவில்லை.

9 கடந்த மாதம், அனைத்துலக ஒலிம்பிக் குழு 2012 ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான நகரத்தைத் தேர்வு செய்வதற்குச் சிங்கப்பூரில் கூடியது. இறுதியில் லண்டன் தேர்வு

செய்யப்பட்டது. சில நாட்களுக்கு உலக நாடுகளின் கவனிப்பின் கீழ், சிங்கப்பூர் இந்தக் கூட்டத்தை சிறப்பாக நடத்தியது. நாம் சிறப்பாகவே செயல்பட்டிருக்கிறோம். மேலும், எதிர்கால நிகழ்ச்சிகளில், எடுத்துக்காட்டாக, அடுத்த ஆண்டு அனைத்துலகப் பண நிதியமும், உலக வங்கியும் அவற்றின் கூட்டங்களை இங்கு நடத்தும்போது, நாம் இன்னும் சிறப்பாக செயல்பட வேண்டும். ஒரு முன்னணி நகரமாக, திறனாளர்களுக்கும், தொழில்முனைப்பிற்கும் ஒரு முதல்தர சூழ்நிலையைக் கொண்ட இடமாகவும், மற்றும் எல்லா இனங்களையும் மற்றும் சமய நம்பிக்கைகளையும் கொண்ட சிங்கப்பூரர்களுக்கு ஓர் இல்லமாகவும் நாம் மாறுவதன் ஒரு பகுதிதான் இது.

10 பொருளியல் வளர்ச்சியே சிறந்த சமூக நலத் திட்டமாகும். செழிப்பு, பல சிரமமான சவால்களைச் சமாளிப்பதற்கான வளங்களை நமக்குக் கொடுக்கும். அதிகரித்து வரும் வருமான இடைவெளி என்பது ஒரு சவாலாகும். உலகம் முழுவதும் நிலவுகின்ற இப்போக்கை நாம் மாற்ற முடியாது. ஆயினும், குறைந்த வருமானம் உள்ள சிங்கப்பூரர்கள் மாற்றங்களுக்கு ஏற்ப ஈடுகொடுப்பதற்கும் புதிய வாய்ப்புகளைத் தேடுவதற்கும் நாம் உதவலாம். பயனுள்ள திறன்களில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறோம். மேலும், அவர்கள் இன்னும் நல்ல சம்பளங்களைப் பெறுவதற்கு, அவர்களுடைய வேலைகளை மறு உருவாக்கம் செய்கிறோம். அவர்களுடைய பிள்ளைகளுக்கு நல்ல கல்வியை வழங்குகிறோம். அதோடு, பயனீட்டு மற்றும் போக்குவரத்துக் கட்டணங்களை கட்டுவதற்கு நாம் அவர்களுக்கு உதவுகிறோம் . மேலும், உதவி தேவைப்படுவோர் விரைவாக மீண்டும் அவர்கள்

சொந்தக் கால்களில் நிற்க உதவும் கோம்கேர் (ComCare) திட்டமும் செயல்பட்டு வருகிறது.

11மூப்படைந்து வரும் நமது மக்கள் தொகை இரண்டாவது சவாலாகும். சிங்கப்பூரர்கள் எவ்வளவு காலத்திற்கு முடியுமோ அவ்வளவு காலத்திற்கு, துடிப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதுடன், அவர்கள் வேலை செய்யவும் வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு வயதாகும்போது, நிதி பாதுகாப்பைப் பெற்றிருக்க முடியும், நல்ல மருத்துவப் பராமரிப்பைப் பெற முடியும் மற்றும், மேலும் மனநிறைவான வாழ்க்கை வாழ முடியும். நம் சமுதாயத்தின் மதிப்புமிக்க உறுப்பினர்களான மூத்த குடிமக்களின் ஒன்றுசேர்ந்த அனுபவங்களையும் அறிவாற்றலையும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

12மூன்றாவதாக, நாம் இளையவர்கள், முதியவர்கள் உட்பட அனைத்து சிங்கப்பூரர்களின் ஆரோக்கியத்தையும் தொடர்ந்து பேணி காக்க வேண்டும். உங்களில் பலர் உங்களுடைய மருத்துவச் செலவுகளைப் பற்றி கவலைப்படுகிறீர்கள். ஆயினும், நமது சுகாதாரப் பராமரிப்பு முறை அனைவருக்கும் ஓர் உயர்தரக் கவனிப்பை வழங்குகிறது. நாம் சுகாதார கவனிப்புச் சேவைகளை அனைத்து வருமானப் பிரிவினர்களுக்கும் இன்னும் கட்டக் கூடியதாக ஆக்குவதற்குப் பாடுபடுவோம். ஆயினும், நீங்கள் உங்களை நன்றாகக் கவனித்துக்கொள்ள, ஆரோக்கியமாக இருப்பதன் மூலம் உங்கள் பங்கை ஆற்ற வேண்டும். ஏனெனில், நலமாக இருப்பதே மருத்துவச் செலவுகளைக் குறைவாக வைத்திருப்பதற்குச் சிறந்த வழி.

13 இவை கடினமான பிரச்சினைகள். ஆனால், நாம் மற்ற நாடுகளின் அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு அவர்கள் செய்த தவறுகளைத் தவிர்ப்போம். இந்தப் பிரச்சினைகளை நம்மால் சமாளிக்க முடியும் என நான் நம்புகிறேன்.

14எதிர்காலத்திற்கான அறிகுறிகள் சாதகமாகவே இருக்கின்றன. ஆசியா வளப்பம் அடைந்து வருகிறது. ஆசியானில் உள்ள நமது அண்டை நாடுகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. நாமும் சரியான நடவடிக்கைகளையே எடுத்து வருகிறோம். நாம் நமது மக்கள் மீது முதலீடு செய்து மாறுபட்ட உலகத்தில் வாழ்வதற்குத் தயாராகிறோம். அடுத்த ஐந்து ஆண்டுகள், கடந்த ஐந்து ஆண்டுகளைவிட இன்னும் சிறப்பாக இருக்கும் என நான் எதிர்பார்க்கிறேன். ஆகவே, நாம் ஒன்றுசேர்ந்து செயல்பட்டு, சிங்கப்பூரை இன்று இருப்பதைவிட இன்னும் வளர்ச்சி அடையச் செய்து வளப்பம் பெறச் செய்வோம், என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

15 நமது சுதந்திர தினத்தின் 40-வது ஆண்டு விழாவில், அனைவருக்கும் மகிழ்ச்சியான தேசிய தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். சிங்கப்பூருக்கு ஓர் ஒளிமயமான, நிலையான எதிர்காலத்தைப் பெறுவதற்கு ஒன்றிணைந்த மக்களாக நம்மை நாம் மீண்டும் அர்ப்பணித்துக் கொள்வோம். வணக்கம்